
# ஆய்வு அணுகுமுறைகள்


ஆய்வு அணுகுமுறைகள்
அளவுசார் ஆய்வு
பண்புசார் ஆய்வு
எண் சார்புள்ள தரவுகள்
எண் சார்பற்ற சொற்கள், படங்கள் ஆகியவை

# அளவுசார் ஆய்வு

- அளவுசார் ஆய்வு கருதுகோளை மதிப்பீடு செய்வதிலும் கோட்பாடுகளை ஆராயவும் அதிகமாக மேற்கொள்ளப்படும்.
- எண் சார்புடையதாக இருப்பதால் இவ்வாய்வுக்கான தரவுகள் வினாநிரல், மதிப்பீட்டுச் சோதனை, குறியீட்டுப் பட்டியல் ஆகியவற்றின் மூலம் பெறப்படும்.
- இவ்வகை ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள், தங்களின் விருப்பு வெறுப்புகளை ஆய்வில் பாதிப்புகளை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வர்.
- இவ்வாறு பெறப்படும் தரவுகளைப் பகுப்பாய்ந்து கிடைக்கப்பெறும் ஆய்வின் முடிவுகள் ஒருபுறசார்புடையதாக இராது. மாறாக, உள்ளவற்றை உள்ளவாறே காட்டும் தன்மை உடையதாக இருக்கும்.

- அளவுசார் ஆய்வில் பொதுவாகப் பெறப்படும் தரவுகள் எண்களில் அளவிடப்படும். காட்டாக, லிக்கர்ட் ஐந்து புள்ளியம் அளவீடு முறையைக் காணலாம்.
    1. முற்றிலும் சம்மதம் இல்லை
    2. சம்மதம் இல்லை
    3. நடுநிலை
    4. சம்மதம்
    5. முற்றிலும்
- அளவுசார் தமது வினாநிரலில் கேட்கும் கேள்விகளுக்கு, ஆய்வுக்குட்பட்டோர் தங்களின் கருத்துகளை எண்கள் மூலம் குறிப்பிடுவர். காட்டாக,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கணினிவழிக் கல்வி ஆசிரியர்களின் பணிச்சுமையைக் குறைக்கிறது** | 1 | 2 | 3 | 4 | 5 |

- அளவுசார் ஆய்வின் அறிக்கை பற்பல எண்களைக் கொண்டிருக்கும். அறிக்கையில் பல குறிவ்ரைகள், அட்டவணைகள் அமைந்திருக்கும். ஆனால், கருத்துகளின் விவரிப்பு குறைவாகவே இருக்கும்.

# பண்புசார் ஆய்வு

- பண்புசார் ஆய்வு வருமுறை ஆய்வாக இருப்பதால் இவ்வாய்வு புதிய கருதுகோளையோ கோட்பாட்டையோ அமைக்க உதவும்.
- பண்புசார் ஆய்வுக்கான தரவுகள் உற்றுநோக்கல், நேர்காணல், சோதனை வழி ஆய்வு போன்ற அணுகுமுறைகளின் வழி பெறப்படும்.
- இவ்வகையான ஆய்வினை மேற்கொள்வோர் சூழலுக்கு ஏற்ப வெவ்வேறான நிலைகள் இருக்கும் எனவும் ஒரே மாதிரியான சூழல் ஏற்படுவது அரிது எனவும் கருத்துரைப்பர்.
- இவ்வகௌயான ஆய்வின் வழி பெறப்படும் முடிவுகளைப் பொதுமைப்படுத்துதல் என்பதும் அரிதாகும்.

# மாறி

- மாறி
  - தற்சார்பு மாறி
  - சார்பு மாறி
  - இடைநிலை மாறி

# ஆய்வு
# வடிவாக்கம்

# சோதனைவழி ஆய்வின் வடிவாக்கம்

- ஆய்வுக்குட்பட்டோர் பரிசோதனையில் கையாளப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முறைமை.
- கட்டுப்படுத்தப்பட்ட மாறிகளைச் சோதனைப் பொருள் இன்றிக் கையாளுதல்.
- இடைநிகழ் மாறிகளைத் தடுத்தல் அல்லது கட்டுப்படுத்துதல்.
- உற்றுநோக்குதல் நடத்தப்பெறும் முறைமை.
- தரவுகளின் தொடர்பினைக் காணப் பகுப்பாய்வை மேற்கொள்ளும் முறைமை.

- மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படையில் சோதனைவழி ஆய்வின் வடிவாக்கத்தை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம், அவையாவன்,
  – சோதனைவழி ஆய்வின் முந்தைய வடிவமைப்பு
  – உண்மைச் சோதனைவழி ஆய்வு வடிவாக்கம்
  – இணைக்குழு சோதனைவழி ஆய்வு வடிவாக்கம்
  – காரணிய வடிவாக்கம்

# சோதனைவழி ஆய்வின் முந்தைய வடிவமைப்பு

அ. சோதனைப் பொருள் @ செயல் நடவடிக்கை → உற்றுநோக்கல் @ சோதனை

ஆ. முன்னறி சோதனை → சோதனைப் பொருள் @ செயல் நடவடிக்கை → பின்னறி சோதனை

இ. ஆய்வுக்குட்படுத்தப்படும் குழு → சோதனைப் பொருள் @ செயல் நடவடிக்கை → பின்னறி சோதனை

கட்டுப்பாட்டுக்குழு → பின்னறி சோதனை

# உண்மைச் சோதனைவழி ஆய்வு வடிவாக்கம்

அ.

மாதிரிக்கூறு தேர்வு → சோதனைப் பொருள் @ செயல் நடவடிக்கை → பின்னறி சோதனை


மாதிரிக்கூறு தேர்வு → கட்டுப்பாட்டுக் குழு → பின்னறி சோதனை

ஆ.

மாதிரிக்கூறு தேர்வு → முன்னறி சோதனை → சோதனைப் பொருள் @ செயல் நடவடிக்கை → முன்னறி சோதனை

மாதிரிக்கூறு தேர்வு → முன்னறி சோதனை → கட்டுப்பாட்டுக் குழு → முன்னறி சோதனை

# மேலோட்ட ஆய்வு




- அனைய ஆய்விற்கான மாதிரிக்கூறுகள் ஆய்வின் நோக்கம், ஆய்வாளரின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- இந்த வகையிலான ஆய்வு வடிவமைப்பு வகுப்பறை ஆய்வுகளில் அதிகம் பயன்படுத்தப்படும்.
- ஆய்வுக்குட்பட்டோரும் கட்டுப்பாட்டுக்குழுவும் ஒரே மாதிரியான சூழலிலும் அடைவுநிலையிலும் இருக்கும் சூழலில் இவ்வடிவமைப்பு ஏதுவாக அமையும்.

# அளவாய்வு (survey)

- ஒரு குறிப்பிட்ட காலக்கட்ட்த்தில் பெருவாரியான மாதிரிக்கூறுகளிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படும்.
- எ.கா: மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வாக்காளர் பட்டியல் போன்றவை ஒரு குறிப்பிட்ட தகுநிலை அடிப்படையில் (குடியுரிமை / வயது) நாடு முழுவதும் அனைத்துத் தகுநிலை உடையோரிடமிருந்தும் தகவல் திரட்டும் நோக்கத்தையுடையது.
- ஆய்வுகளுக்குத் தொகுதி முழுவதும் ஆராய்ச்சிக்குட்படுத்தப்படாமல் நன்முறையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதி மட்டுமே ஆராய்ச்சியாளருக்குப் போதுமானதாக இருக்கும்.
- இவ்வாய்விற்கான தரவுகள் கணக்கெடுப்பு முறைக்குக் குறியீட்டுப் பட்டியல் மூலம் எளிதில் திரட்டப்படும்.

- வினா நிரல் - முதன்மை ஆய்வுக் கருவி
- முடிவுகள்- எழுத்து வடிவு, குறியீடு, விளக்கப்படங்கள்
- முடிவுகளை மேம்படுத்த ஆவணப் பகுப்பாய்வு, உற்றுநோக்கல், நேர்காணல் போன்ற பண்புசார் ஆய்வின் துணை அவசியமாகிறது.
- அளவாய்வு- நேர விரயம் தடுக்கப்படுகிறது

அளவாய்வு

- குறுக்குவெட்டு முறை
- நீண்டகால ஆய்வு முறை

# குறுக்குவெட்டு முறை

- ஒரே நேரத்தில் பெருவாரியான மாதிரிக்கூறுகளிடம் இருந்து தரவுகள பெறுதலாகும்.
- குறிப்பிட்ட இடவு / சிக்கலைப் பற்றி அந்நேரத்தில் மக்களின் கருத்து யாதென விளக்கும்.

# நீண்டகால ஆய்வு முறை

- ஓர் அளவாய்வு மேற்கொள்ளப்பட்ட பின் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மேலும் பல தடவைகள் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும்.
- இவ்வகை ஆய்வின் மூலம் மக்களின் கருத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் சேர்த்து ஆய்வு செய்ய இயலும்.

# அளவாய்வு

1. சிக்கலைத் தெரிவு செய்தல்
2. ஆராயப்பட வேண்டிய மாறிகளை அடையாளம் காணுதல்
3. மாதிரிக்கூறு தேர்வு
4. ஆய்வுக்கருவி (வினாநிரல்) தயாரித்தல்
5. ஆய்வுக்கருவி (வினாநிரல்) சோதித்தல்- முன் சோதனை
6. தரவுகளைத் திரட்டுதல்
7. தரவுகளின் பகுப்பாய்வு
8. கருதுகோளைச் சோதித்தல்
9. ஆய்வின் முடிவு / பொதுமைப்படுத்துதல் (தேவைப்பட்டால்)

# விடய ஆய்வு

- ஒரு தனிநபர், ஒரு குடும்பம், ஒரு சமூகக் கூட்டம், அல்லது தனி நிறுவனம் பற்றி விரிவாகவும் அழகாகவும் மேற்கொள்ளப்படும் ஆய்வாகும்.
- நோக்கம்: ஒரு தனி அலகின் வாழ்க்கைச் சுழற்சியைப் புரிந்து கொள்வதற்கும் அல்லது வாழ்க்கைச் சுழற்சியில் நடைமுறையில் உள்ள குறிப்ப்ட்ட போக்கினைப் புரிந்து கொள்வதற்கும் ஆகும்.
- தொகுதியில் இருந்து தனி அலகுகள் மாதிரிக்கூறெடுக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படும்.
- இவ்வாய்வு காரணியங்கள் அதன் சார்பான விளைவுகள் ஆகியவற்றை மிக ஆழமாக ஆராயும் ஓர் ஆய்வாகும்.